Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 04-02-2026
Deposition of witness for : PW 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | வயது | : | 59 |
| தந்தை பெயர் | : | கண்ணுசாமி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பிள்ளையார்பட்டி | தொழில் | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D.**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் நகர தெற்கு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 6.7.2025 அன்றுஇரவு 10.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மாதாக்கோட்டையை சேர்ந்த துரைமுருகன் என்பவர் நிலையம் அஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய கு.எண்.146/2025 பிரிவு 103(1)

BNS படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலமாக தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு காவலர் மூலம் அனுப்பி வைத்தேன் . நகல்களை சம்பந்தபபட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.16 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) அ.சா.ஆ.16 முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் நேரம் என்ற இடத்தில் நாள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரவு 10.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மறு நாள் காலை 11.00 மணியளவில்தான் காவலர் வசம் ஒப்படைத்து நீத்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைக்க அறிவுறுத்தினேன். இந்த இடைப்பட்ட நேரத்தில் முதல் தகவல் அறிக்கை என் வசம் காவல் நிலையத்தில் இருந்தது.

2) முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டவுடன் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு உடனடியாக அனுப்பாதற்கு காரணம் என்ன என்றால் இரவு நேரம் என்பதால் அனுப்பவில்லை.

3) நான் முதல் விசாரணையில் சொன்ன நேரத்தில் எந்த புகாரும் பெறப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மறுநாள் ஒரு பொய் புகார் பெறப்பட்டது என்றும்

அதன்அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் அதனால்தான் காலதாமதமாக நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பபட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்